# அடிபணிவு அரசியல் எதிர் பேரம் பேசும் அரசியல்

# இது தான் கூட்டமைப்பின் குழப்பத்திற்கான காரணம்

- வேல்ஸ் இல் இருந்து அருஷ்

சிறீலங்காவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தென்னிலங்கையில் மட்டுமல்லாது சிறுபான்மை தமிழ் மக்கள் மத்தியிலும் மிகப்பெரும் நெருக்கடியான நிலையை தோற்றுவித்துள்ளது.

விடுதலைப் புலிகளினால் ஒழுங்குபடுத்தப்பட்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து வந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் பலத்த குத்து வெட்டுக்கள் ஆரம்பமாகியதை தொடர்ந்து தமிழ் மக்களின் பிரதான கட்சி பல பிரிவுகளை சந்தித்துள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பொறுத்த வரையில் உரிமைக்காக போரிடும் இனத்தின் பிரதிநிதிகளாக செயற்படும் நோக்கில் அது உருவாக்கப்பட்டது. எனவே தென்னிலங்கை சிங்களக் கட்சிகளை போலவோ அல்லது இந்திய அரசியல் கட்சிகளை போலவோ அவர்கள் தமது குடும்பநலன், தமது இருப்பை தக்கவைத்தல் போன்ற காரணங்களுக்காக தமது கொள்கைகளை மாற்ற முடியாது. அதனை தமிழ் மக்களும் அனுமதிக்கப் போவதில்லை.

ஆனால் கடந்த இரு வாரங்களாக நடைபெறும் சம்பவங்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் உள்ளவர்களின் உண்மையான உள்நோக்கத்தை அம்பலப்படுத்தியுள்ளது. தமிழ்த் தேசியத்திற்கு சார்பானவர்கள் பலர் உட்பட 12 உறுப்பினர்களை எதிர்வரும் பொதுத்தேர்தலில் நிறுத்துவதை கட்சி விரும்பவில்லை.

***அதற்கான காரணம் என்ன?***

தமிழ் மக்களின் விடுதலையே நோக்கம் என்ற கொள்கையுடன் கட்டியமைக்கப்பட்ட அமைப்பு அந்த கொள்கைகளில் வலுவாக உள்ளவர்களை வெளியேற்றுகின்றது என்றால் அதன் அர்த்தம் என்ன? இவை தான் தற்போது தமிழ் மக்களிடம் எழுந்துள்ள கேள்வி.

அதற்கான விடை சுருக்கமானது. அதாவது தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தனது ஆளுமைக்குள் கொண்டுவந்து ஒரு அடிபணிவு அரசியலை அங்கு தோற்றுவிக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகவே கூட்டமைப்பில் இருந்து வெளியேறியவர்கள் தெரிவித்துள்ளனர்.

உதாரணமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு எஸ்.கஜேந்திரன் மீண்டும் தேர்தலில் போட்டியிடக் கூடாது என இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாக தனது பெயரை குறிப்பிட விரும்பாத தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதனை போலவே இந்திய அரசினால் வழங்கப்பட்ட வேட்பாளர் பட்டியலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது கட்சிக்குள் மேற்கொண்ட மறுசீரமைப்புக்கள் போல அதன் கொள்கைகளையும் மறுசீரமைத்துள்ளதாகவே தகவல்கள் வெளிவருகின்றன. தமிழீழத்தை தாம் ஒருபோதும் ஆதரிக்கவில்லை என அதன் தலைவர் திரு ஆர்.சம்பந்தன் தெரிவித்து வரும் கருத்துக்கள் ஒருபுறம் இருக்க, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத்திட்டமாக அவர்கள் எதனை முன்வைக்கின்றனர் என்பது தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெளிவான திட்டத்தை இதுவரை முன்வைக்கவில்லை.

கடந்த ஆண்டு (2009) ஜனவரி மாதம் கூட்டமைப்பின் தலைமைப்பீடத்தில் உள்ள சில மூத்த உறுப்பினர்கள் இந்தியா மற்றும் நோர்வே ஆகிய நாடுகளின் ஆலோசனைகளுடன் சில திட்டங்களை வரைந்திருந்த போதும் அதனை கட்சி உறுப்பினர்களுக்கு கூட அவர்கள் காண்பிக்கவில்லை.

அதனை அவர்கள் வெளியிடுவார்கள் என ஓராண்டுக்கு மேலாக பல உறுப்பினர்கள் காத்திருந்த போதும் அவர்கள் அதனை வெளியிடவில்லை. இது தொடர்பில் 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலம்சென்ற அரசியல் துறை பொறுப்பாளர் திரு பா.நடேசன் அவர்களுக்கும் தெரியப்படுத்தியிருந்ததாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசின் அனைத்துக்கட்சி குழுவின் தீர்வுத்திட்டம் போலவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தீர்வுத்திட்டமும் மறைக்கப்பட்டு வருவது பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

அதனை வலுப்படுத்துவதாகவே கூட்டமைப்பில் இருந்த தமிழ் தேசியத்திற்கு ஆதரவானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். எனினும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள

**கூட்மைப்புக்குள் உள்ளவர்களானாலும் சரி அல்லது அதில் இருந்து வெளியேறிய வர்களானாலும் சரி தமிழ் மக்களின் விடுதலைக்கான கொள்கைகளுக்கு எதிரான சக்திகளுடன் கூட்டணி அமைப்பவர்களை கண்டறிவதும், புறக்கணிப்பதுமே தற்போது தமிழ் மக்களுக்கு முன் உள்ள முக்கிய கடமையாகும்.**



தற்போதைய நெருக்கடியான நிலைமைக்கு காரணம் இந்தியாவின் நடவடிக்கைகள் தான் என்பது தெளிவானது.

இந்திய அரசை பொறுத்தவரையில் ஈழத் தமிழ் மக்களின் பேரம்பேசும் அரசியலை மழுங்கடித்து, அவர்களிடம் ஒரு அடிபணிவு அரசியலை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. அதற்கமைவாகவே தேசியத்திற்கு ஆதரவானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தை சேர்ந்த இரு உறுப்பினர்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடாக நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் இந்திய அரசு முறியடித்துள்ளது.

அதாவது தாயத்தில் உள்ள தமிழ் மக்களுக்கும், புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கும் இடையில் உள்ள உறவுகளை முற்றாக இல்லாது செய்துவிடவும் இந்தியா திட்டமிட்டுள்ளது.

***அதற்கு காணம் என்ன?***

புலம்பெயர் தமிழ் சமூகம் அடிபணிவு அரசியலுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை, அவர்கள் தமிழ் தேசியம், சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி என்ற கொள்கைகளில் உறுதியாக உள்ளனர் என்பதுதான் இந்தியாவின் அச்சம்.

ஆனால் புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கு தாயகத்து அரசியலில் காத்திரமான பங்களிப்பை வழங்கும் ஆளுமை உள்ளதா என்பது தான் தற்போது எழுந்துள்ள கேள்வி. அதற்கு விடை காண்பதற்கு முன்னர் கடந்த மாதம் நடைபெற்ற அரச தலைவர் தேர்தலின் முடிவுகள் தொடர்பில் அரச தரப்பும், கூட்டமைப்பும் என்ன தெரிவித்துள்ளன என்பதை நோக்குவது பொருத்தமானது.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களிடம் புலம்பெயர் தமிழ் மக்களின் செல்வாக்கு அதிகம் உள்ளது. அதனால் தான் நாம் வடக்கு கிழக்கில் தோல்வியுற்றோம் என சிறீலங்கா பிரதமரும், அதற்கு துணை நின்ற துணை இராணுவக்குழுவான ஈ.பி.டி.பி என்ற ஆயுதக்குழுவின் தலைவரும் தெரிவித்திருந்தனர்.

ஆனால் தாயகத்து அரசியலில் புலம்பெயர் தமிழ் சமூகம் ஆதிக்கத்தை செலுத்த முடியாது என முன்னாள் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ண சிங்கம் கொழும்பில் இருந்து வெளிவரும் லக்பிம வார ஏட்டுக்கு 31.01.2010 ஆம் நாள் வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார். தாயகத்தில் என்ன நடைபெறவேண்டும் என்பது தொடர்பில் அழுத்தம் கொடுக்கும் செயற்திறன் புலம்பெயர் தமிழ் சமூகத்திடம் இல்லை என அவர் தெரிவித்திருந்தார்.

இவர்களில் யார் கூறுவது உண்மையானது என்ற கேள்விகள் எழலாம், ஆனால் புலம்பெயர் தமிழ் சமூகம் என்பது 500 வருடங்களுக்கு முன்னர் தாயகத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் அல்ல, அவர்களில் பெரும்பாலானோர் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னரே சிறீலங்காவை விட்டு வெளியேறியவர்கள். எனவே தாயகத்து மக்களுடன் அவர்களின் உறவுகள் அறுந்துவிடவில்லை.

தாயகத்து அரசியலில் அவர்களின் பங்களிப்பு என்பது ஒரு காத்திரமான நிலையில் உண்டு என்பது தான் உண்மை. தமது சுய இலாபங்களுக்கான இந்திய நலனை அனுசரித்து செல்லும் சில சக்திகள் தாயகத்து அரசியலில் இருந்து புலம்பெயர் தமிழ் சமூகத்தை புறந்தள்ள முயலலாம். ஆனால் தமிழ் மக்கள் தெளிவானவர்கள் என்பதை அவர்கள் மீண்டும் மீண்டும் மறந்து விடுகின்றனர்.

எனவே உருளைக்கிழக்கு வியாபாரத்திற்காகவும், தமது பிள்ளைகளின் வெளிநாட்டு கல்வி வாய்ப்புக்களுக்காவும், பரம்பரை அரசியலை தக்கவைப்பதற்காகவும் களமிறங்கும் தமிழ் வேட்பாளர்கள் முதலில் இனம்காணப்பட்டு புறம்தள்ளப்பட வேண்டும்.

தேசியத்திற்கு ஆதரவானவர்களை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும். புலம்பெயர் தமிழ் சமூகத்தின் ஆதரவுகளை புறம்தள்ளாது செயற்படுபவர்களையும், ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் என்ன தீர்வை வைக்கப்போகின்றனர் என்பது தொடர்பிலும், உலகின் முன் தமிழ் மக்களின் பிரச்சனைகளை எவ்வாறு கொண்டு செல்லப் போகின்றனர் என்பது தொடர்பிலும் தெளிவான கொள்கைகளை உடையவர்களை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் பேசும் மக்களின் அரசியல் குறியீடாக ஆரம்பிக்கப்பட்ட கட்சி தான் எனினும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் அதில் உள்ளவரையிலும் தான் அது கூட்டமைப்பின் முன்னைய கொள்கைகளை பிரதிபலிக்க முடியும். ஆனால் தற்போது பல பிரிவினைகளை சந்தித்துள்ள நிலையில் அது முன்னைய கூட்டமைப்பின் கொள்கைகளை பிரதிபலிக்க முடியாது.

தமிழ் மக்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கான ஆதரவு என்ற தமது முன்னைய கொள்கைகளை மறுசீரமைத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தேசியத்திற்கு ஆதரவானவர்கள், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் தெளிவான, வெளிப்படையான கொள்கைகளை முன்வைப்பவர்கள், புலத்திலும், தாயகத்திலும் ஈழத்தமிழ் மக்களை ஒன்றிணைத்து செயற்படுபவர்கள் தான் தமிழ் மக்களின் தெரிவாகவேண்டும். கூட்டமைப்புக்குள் உள்ளவர்களானாலும் சரி அல்லது அதில் இருந்து வெளியேறியவர்களானாலும் சரி தமிழ் மக்களின் விடுதலைக்கான கொள்கைகளுக்கு எதிரான சக்திகளுடன் கூட்டணி அமைப்பவர்களைக் கண்டறிவதும், புறக்கணிப்பதுமே தற்போது தமிழ் மக்களுக்கு முன் உள்ள முக்கிய கடமையாகும்.

நடைபெற்று முடிந்த அரச தலைவர் தேர்தல் வேறு, நடைபெறப்போகும் பொதுத் தேர்தல் வேறு என்பதனை தமிழ் கட்சிகள் உணரவேண்டும். அரச தலைவர் தேர்தலின் முடிவைக் கொண்டு தாம் எது செய்தாலும் தமிழ் மக்கள் தம்மை ஆதரிப்பார்கள் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கருதுமானால் அது தவறானது என்பதை அவர்கள் விரைவில் உணர்ந்து கொள்வார்கள்.

பிரான்ஸ்'இல் உள்ள ஈழமுரசு காரியாலயம் ஊடாக வாசகர் ஒருவர் எனக்கு அனுப்பிய மடலில் கேட்கப்பட்ட இரு கேள்விகளில் ஒரு கேள்விக்கான பதிலாக இப்பத்தி அமைந்துள்ளது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.